ஜுவல் லேன்ட் ஜுவலரி
வழங்கும்
அரியதோர் சந்தர்ப்பம்

உங்களுக்குப் பிடித்தமான தங்க நகைகளை வாங்கி மாதாந்த தவணை முறையில் பணம் செலுத்தலாம். முழு விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளவும்.

ஜுவல் லேன்ட் (பிரைவேட்)
லிமிட்.

447, மருதானை றோட், கொழும்பு-10
தொலைபேசி- 699326 — 685910



செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6589 1990 மே 16 புதன்கிழமை ★ ★ ★ දිනපති



அசல் 22 கரட்
தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்
இன்றே விஜயம் செய்யுங்கள்

JEWEL LAND (pvt) LTD.
No 447 Maradana Road, Colombo 10.
DEALERS IN JEWELLERY
தொலைபேசி- 699326 — 685910


# ஈ.பி.ஆர்.எல்.எப்.19 அம்ச கோரிக்கைகள் சர்வகட்சி — மாநாட்டில் —

## பேச்சுவார்த்தையின் போது அரசு இணக்கம் என்று தூதுக்குழுவில் சென்ற அபூ யூசுப் ரிஃபாதிக்கு தகவல்

## அமைச்சர் ஹமீது கலந்துகொள்ளவில்லை

— முகம்மது ஐயூப —

கொழும்பு, மே 15

**ஈ. பி. ஆர். எல். எப். இயக்கம் சமர்ப்பித்துள்ள 19 அம்சக் கோரிக்கைகளை சர்வகட்சி மாநாட்டில் ஆராய அரசு இணக்கம் தெரிவித்திருக்கிறது.**

நேற்று நாடாளுமன்ற கட்டிடத்தில் ஈ பி ஆர் எல் எப் இயக்கத்திற்கும அரசுக்கும இடையே பேச்சுவார்த்தைகள் ஆரமபமாகின-

அப்போதே இந்த இணக்கம தெரிவிக்கப்பட்டதாக வடக்கு கிழக்கு மாகாண சபையின் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம கே அபூயூசுப் தினபதிக்குத் தெரிவித்தார்-

பேச்சுவார்த்தையின் போது யாழ் மாவட்ட எம பி திரு கே பிரேமச்சந்திரன், ஈ பி ஆர் எல் எப் இயக்கத்தின் நால்வர் பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைமை வகித்தார்-

வடக்கு கிழக்கு மாகாண நிதி அமைச்சர் திரு பெ கிருபாகரன் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் அபூயூசுப் மற்றும் யாழ் மாவட்ட எம பி திரு வீ யோக சங்கரி ஆகியோர் அந்தக் குழுவின் உறுப்பினர்கள் ஆவர்-

அரசின் சார்பில் தோட்ட தொழிற்றுறை அமைச்சருமபாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன சர்வதேச விவகாரங்கள் தொடர்

## சோமண்ணை



ஆற்றியோர சேமிப்பில் தமக்கு சேமிப்பு தேடிக் கொள்ளுகினம போல...

## சிவமகாராசா எம். பி. பதவி ராஜினாமா

கொழும்பு, மே 15

யாழ் மாவட்ட ஈழவர் ஜனநாயக முன்னணி எம் பி திரு எஸ் சிவமகாராசா தமது எம பி பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்-

இது தொடர்பாக அவர் சபாநாயகருக்கு அறிவித்திருப்பதாக சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்-

[ஊ—ற]

## இந்திய தூதரக உத்தியோகத்தர் கடலுக்கு பலி

யாழ் மக்கள் வங்கி

## அடகு நகை வட்டிச் சலுகை ஜூன் 30 வரையே நீடிப்பு

யாழ்ப்பாணம், மே 14

யாழ் மக்கள் வங்கியில் அடகு வைத்திருக்கும நகைகளுக்கான வட்டிச் சலுகை இவ் வருடம ஜூன் 30 ஆம திகதி வரையே நீடிக்கப்படும.

யாழ் மக்கள் வங்கி பொது முகாமையாளர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அடகு நகைகளை மீளக் கையளிக்கும நடவடிக்கைகள் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப் பட்டன.

(2 ஆம பக்கம பார்க்க)

கல்முனை, அ. பற்று, பொத்துவில் பகுதிகளில்

## கடல் மற்றும் ஆற்று மீனுக்கு புழு நோய்

### பிடிப்பதுமில்லை, உண்பதுமில்லை

— எம ஏ பக்குருதீன். ஏ எல் ஜுனைதீன் —

அக்கரைப்பற்று, மே 14

கல்முனை, அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய பகுதிகளில் மீன் வகைகளில் ஒரு வித நோய் பரவியதை அடுத்து அவற்றில் புழுக்கள் காணப்படுகின்றன- இதனால் இப்பகுதிகளில் மீன் பிடிப்பதுமில்லை- உணபதும் இல்லை-

இதனைத் தொடர்ந்து இப் பகுதிகளின் மீன் சந்தைகள் யாவும் இழுத்து மூடப்பட்டுள்ளன-

மீன் பிடிக்க வேண்டாம் என்றும் மீன் சாப்பிட வேண்டாம் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் கேட்டிருக்கிறார்கள்-

பள்ளிவாசல் நம்பிக்கை சபையினரும் மீன் வகைகளை சாப்பிட வேண்டாம் என ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர்-

கடந்த வாரம் சமைப்பதற்கென வாங்கப்பட்ட மீன்களில் புழுக்கள் துடிப்பதை பொதுமக்கள் நேரடியாகவே கண்டுள்ளனர்-

ஆற்று மீனுக்கு மாத்திரமின்றி கடல் மீனுக்கும் இந்த நோய்

(2 ஆம பக்கம பார்க்க)

## பெரிய வெங்காயம் போதியளவு இறக்குமதி

கொழுமபு மே 15

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம போதியளவு பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்திருக்கிறது-

1250 மெட்ரிக் தொன் தற்சமயம் கையிருப்பில் இருக்கிறது-

கூ மொ வி நிலைய சில்லறை விற்பனை நிலையங்கள் ஊடாக இவற்றை விநியோகிக்க நட

அப்போதே இந்த இணக்கம தெரிவிக்கப்பட்டதாக வடக்கு கிழக்கு மாகாண சபையின் போக்குவரத்த அமைச்சர் எப் இயக்கத்தின் நால்வர் பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைமை வகித்தார்-

வடக்கு கிழக்கு மாகாண நிதி வின் உறுப்பினர்கள் ஆவர்-

அரசின் சார்பில் தோட்ட தொழிற்றுறை அமைச்சரும பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன சர்வதேச விவகாரங்கள் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் திரு பிரட்மன் வீரக்கோன் ஆகியோர் கலந்து கொண்டனர்-

இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவிருந்த வடக்கு கிழக்கு சமாதானக் கவுன்சில்

(2 ஆம பக்கம பார்க்க)

செய்துள்ளார்-

இது தொடர்பாக அவர் சபாநாயகருக்கு அறிவித்திருப்ப

## ஜீ.சி.ஈ.பரீட்சைவிண்ணப்பம் முடிவு திகதி நீடிப்புஇல்லை

கொழும்பு, மே 15

ஜீ சி ஈ உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி மேலும் நீடிக்கப்படமாட்டாது- பரீட்சைத் திணைக்களம் இதற்கான முடிவை எடுத்திருக்கிறது-

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித்தினம் கடந்த 14 ஆம திகதியுடன் முடி

(2 ஆம பக்கம பார்க்க)

## ஊ. சே. லா. நிதி ரூ. 2 லட்சம் மோசடி

யாழ்ப்பாணம மே 14

வடக்கு, கிழக்கு மாகாண சபை ஊழியர் சேமலாப நிதியின் பேரால் செலுத்திய காசோலைகளில் 2 லட்சம ரூபா மோசடி செய்யப்பட்

(2 ஆம பக்கம பார்க்க)

## தமிழ்-முஸ்லிம் உறவுக்கு பிரமுகர்கள் - புலிகள் இணக்கம்

அக்கரைப்பற்று மே 14

தமிழ் முஸ்லிம மக்களின் உறவுகள் மிகவும ஆரோக்கியமானதாகவும உறுதியானதாகவும இருக்க வேண்டும. அத்தோடு பொத மக்கள் இம்சிக்கப்படுகிறார்கள் என்ற கருத்தை மக்கள் மத்தியில் தலை தூக்க வைக்காது பாதுகாக்க வேண்டியது தமிழீழ விடுதலைப் புலிகளைச் சார்ந்தது.

அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல் சமமேளனப் பிரதிநிதிகளுக்கும தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும இடையில் இவ்வாறு இணக்கம காணப்பட்டது.

விடுதலைப் புலிகளின் வேண்டுகோளுக்கிணங்க அக்கரைப்

(2 ஆம பக்கம பார்க்க)

## சந்திரசேகரனை பொலிஸ் அழைத்து சென்றது

கொழும்பு, மே 15

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் திரு பெ. சந்திரசேகரன் நேற்றுப் பகல் தலவாக்கொல்லையில் வைத்து விசாரணைக்காக பொலீஸாரினால் அழைத்துச் செல்லப்பட்டார்.

அவர் நேற்று தமது கட்சி அலுவலகத்தில் இருந்த வேளையில் நான்கு ஜீப்புகளில் அங்கு வந்த பொலிஸ் கோஷ்டியினர் இவரை அழைத்துச் சென்றனர் என்று கூறப்படுகிறது. (உ-மு)

## உத்தியோகத்தர் கடலுக்கு பலி

கொள்ளுப்பிட்டி இந்திய தூதரகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கடலில் மூழ்கி இறந்தார்.

39 வயதான கிருஷ்ணலால்

(2 ஆம பக்கம பார்க்க)

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம போதியளவு பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்திருக்கிறது-

வெங்காயத்தை கொள்வனவு செய்ய மக்கள் கியூவில் காத்திருக்க வேண்டியதில்லை என்று கூ. மொ வி நிலைய தலைவர் திரு டீ ஏ சமரவீர தெரிவித்தார்

கூ. மொ வி நிலையம் ஆடர் செய்த பெரிய வெங்காயத்தில் கையிருப்பில் இருக்கிறது-

கூ. மொ வி நிலைய சில்லறை விற்பனை நிலையங்கள் ஊடாக இவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது-

கூ. மொ வி நிலையத்தில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 17 ரூபா 50 சதத்துக்கு விற்கப்படுகிறது- ஆனால் தனியார் கடைகளிலும சந்தைகளிலும ஒரு கிலோ வெங்காயம் 60 ரூபாவுக்கு விற்கப்படுவதாகக் கூறப்படுகிறது- (ண-வ)

## இரசாயன பெயர்களில் மருந்து பொருட்கள் — சுனேத்ரா

கொழும்பு மே 15

வர்த்தக பெயர்கள் இல்லாத 52 மருந்த வகைகளை அம்மருந்தின் இரசாயனப் பெயர்களில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும-

இவ்வாறு சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி சுனேத்ரா ரணசிங்க தெரிவித்தார்-

தேசிய அபாயகரமான மருந்துக் கட்டுப்பாட்டுச் சபை திருத்தச் சட்டவரைவு நேற்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது-

விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய திரு ரிச்சர்ட் பத்திரன விடுத்த கோரிக்கைக்கு பதில் அளிக்கும முகமாகவே திருமதி சுனேத்ரா ரணசிங்க மேற்கண்

(5ஆம பக்கம பார்க்க)

## எதிர்க்கட்சி தலைவராக அனுரா கடமை

கொழும்பு, மே 15

திரு அனுர பண்டாரநாயக்க தற்போதைக்கு எதிர்க்கட்சித் தலைவராகக் கடமையாற்றுவார்-

சபாநாயகர் அல்ஹாஜ் எம் ஏச் முகம்மது இதனை நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்,

சிகிச்சை பெறுவதற்காக எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்க யூகோஸ்லாவியாவிற்குச் சென்றிருப்பது தெரிந்ததே- [ண-ற]

## பல்கலை:பிரவேசம் பாதிப்பு என மகஜர்

திருகோணமலை மே 14

யாழ் பிரதேசத்தில் கல்வி கற்ற உயர்தர வகுப்பு மாணவர்களை திருகோணமலை மாவட்ட பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளக் கூடாது இப்படி சேர்த்துக் கொள்வதால் இம்மாவட்ட மாணவர்கள் பல்கலைக்கழக பிரவேசத்தில் பாதிக்கப்படுகின்றனர்-

திருகோணமலை பாடசாலைகளைச் சேர்ந்த இருநூறுக்கும அதிகமான மாணவர்கள் நேற்று காலை உதவி கல்விப் பணிப்பா

(2 ஆம பக்கம பார்க்க)

## அரசு நல்ல நோக்கத்துடன் புலிகளுடன் பேச்சு நடத்துவதானால் அதை உடனே செயலில் காட்ட வேண்டும்

### திருகோணமலைக் கூட்டத்தில் யோகி

எஸ் நவரத்தினம

திருகோணமலை, மே 15

"தமிழீழ விடுதலைப் புலிகளாகிய எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும அரசின் நோக்கம நல்ல நோக்கமாக இருந்தால் அரசு உடனே அதைச் செயலில் காட்ட வேண்டும- நல்ல சேவைகளைச் செய்ய வேண்டும-

மேற்கண்டவாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் திரு யோகி (யோகரத்தினம) சமீபத்தில் திருமலை முற்ற வெளி அரங்கில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியின் போது சிறப்புரை நிகழ்த்துகையில் வலியுறுத்தினார்-

தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ரூபன் தலைமையில் நடைபெற்றது-

அப்போது யோகி சிறப்புரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

"வடக்கு, கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் தமிழரோ, முஸ்லிமோ அல்லர்- அவர் ஒரு சிங்களவர்- திருகோணமலை

(5 ஆம பக்கம பார்க்க)

## சர்ச்சைக்குரிய பிரேரணை விவாதத்திற்கு வரவில்லை

கொழும்பு, மே 15

சபை நிகழ்ச்சிகளில் குறிப்பிட்ட ஒரு பகுதியை ஹன்சாட்டிலிருந்து நீக்குவதற்கான சர்ச்சைக்குரிய பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை-

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின்படி தேசிய அபாயகரமான மருந்துக் கட்டுப்பாட்டுச் சபை திருத்தச் சட்டவரைவே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது- [ண-ற]

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# போதைவஸ்து பாவனையாளர்
# மறுவாழ்வு பெறும் வசதி வேண்டும்

## ஹலீம் இஷாக் கோரிக்கை

கொழும்பு, மே 15

போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி உள்ளவர்களுக்கு சிகிச்சை அளித்து மறுவாழ்வு அளிப்பதற்காக தனியான ஆஸ்பத்திரியோ, மறுவாழ்வு முகாமோ அமைக்கப்பட வேண்டும்.

ஸ்ரீ ல சு க எம் பி ஜனாப் ஹலீம் இஷாக் நேற்று நாடாளுமன்றத்தில் இப்படிக் கூறினார்.

தேசிய அபாயகரமான மருந்துக் கட்டுப்பாட்டுச் சபை திருத்தச் சட்ட வரைவு மீதான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

தேசிய அபாயகரமான மருந்துக் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக இருந்த திரு வீர சிங்க ஓய்வு பெற்றோ, ராஜினாமா செய்தோ வெளிநாட்டு நிறுவனம் ஒன்றில் கடமையாற்றுகிறார்.

அவர் சிறந்த, திறமையான அதிகாரி. அவரை நாம் இழந்திருக்கக் கூடாது.

இன்று ஆயிரக்கணக்கான இளைஞர்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி இருக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு சிகிச்சை அளிக்க அங்கொடை ஆஸ்பத்திரியில் போதிய வசதிகள் இல்லை.

இவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக சுமித்திரி இயக்கம் மட்டுமே செயல்பட்டு வருகிறது.

ஆனால், அதன் தலைவி திருமதி எல்லாவலயினால் மட்டுமே இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியாது.

இன்று மாணவர்கள் மட்டுமல்லாது, மாணவிகளும் போதைப் பொருட்களுக்கு பழக்கப்பட்டு இருக்கிறார்கள். இது பயங்கர நிலைமையாகும்.

இன்று கொலம்பியாவில் போதைப் பொருள் வியாபாரிகளுக்கும், அரசுக்கும் இடையே உள்நாட்டுப் போரே ஆரம்பித்து இருக்கிறது.

இலங்கையில் அங்கொங்கே 3 கிலோ 5 கிலோ என ஹெரோயின் கைப்பற்றப்படுகின்றது.

ஆனால் 3 அல்லது 5 கிலோ பிரச்சினை அல்ல. அதைவிட அதனை பாவிப்பதே பயங்கரமான பிரச்சினையாகும்.

இப்படி அவர் கூறினார்.

(ல—ர)

சம்மாந்துறை மாவட்டத்தில்

## முஸ்லிம்கள் வீட்டுப்பிரச்சினை:
### தீர்க்க உதவுவதாக இம்தியாஸ் உறுதி

மீரிகம, மே 14

சம்மாந்துறை மாவட்டத்தில் உள்ள காணியற்ற, வீடற்ற முஸ்லிம்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் உங்கள் சங்கம் எடுத்து வரும் முயற்சிகளை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இவ்விடயத்தில் எனது அமைச்சினால் முடிந்த சகல உதவிகளையும் வழங்க உறுதி அளிக்கிறேன்.

18 பேர் அடங்கிய சம்மாந்துறை மாவட்ட முஸ்லிம் சங்கப் பிரதிநிதிகள் குழு வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரை அவரது அலுவலகத்தில் சந்தித்து மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தியது.

அச்சமயமே ராஜாங்க அமைச்சர் இவ்வாறு தூதுக்குழுவினரிடம் உறுதி அளித்தார்.

பல பிரச்சினைகள் பற்றி இச்சந்திப்பின் போது ராஜாங்க அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

அவற்றைத் துரிதமாகத் தீர்த்து வைக்குமாறு தமது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுப்பதாக ராஜாங்க அமைச்சர் தூதுக்குழுவினரிடம் தெரிவித்தார்.

சங்கத் தலைவர் ஜனாப் எம் ஏ நூமான், உப தலைவர்களான சட்டத்தரணி அல்ஹாஜ் ஏ எச் எல் ஏ சலீம், டாக்டர் எம் ரீ அப்துல்லா, சட்டத்தரணி சர்கின் காசுர் உட்பட பல பிரதிநிதிகள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

(ல—403)

### பல்கலை பிர...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர் அலுவலகத்திற்கு திரண்டு சென்று இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ் மாவட்டத்தில் உள்ள வசதியான பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் திருகோணமலை மாவட்ட பாடசாலைகளில் சேர்ந்து ஜீ சி ஈ உயர்தர பரீட்சை எழுதுகின்றனர். அவர்கள் அப்பரீட்சையில் அதிக புள்ளிகளை பெற்று பல்கலைக் கழக பிரவேசத்திற்கு தகுதி பெறுகின்றனர்.

இதனால் மிகவும் பின் தங்கிய திருகோணமலை மாவட்ட மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இவ்வருடத்தில் மாத்திரம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 6 மாணவர்கள் ஜீ சி ஈ உயர்தர பரீட்சைக்கு தோற்றுகின்றனர். எதிர்காலத்தில் இவ்வாறு நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இப்படி அந்த மகஜரில் கேட்கப்பட்டிருக்கிறது.

இம் மகஜரை ஏற்றுக் கொண்ட உதவி கல்விப் பணிப்பாளர் திரு வீ தியாகராஜா தற்போது பரீட்சைக்கு தோற்ற உள்ள 6 மாணவர்களின் விண்ணப்பங்களையும் வாபஸ் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் இனிமேல் யாழ் மாவட்ட மாணவர்களை உயர்தர வகுப்பில் சேர்த்துக் கொள்ளக் கூடாது என அதிபர்களுக்கு பணிப்புரை விடுப்பதாகவும் உறுதி அளித்தார்.

(ண—மு—287)

### ஊ. சே. வா. ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

சுன்னாகம் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அட்டன் நெசனல் வங்கி ஆகிய மூன்று வங்கிகளிலுமே இந்த மோசடி இடம் பெற்றிருக்கிறது.

மிக நுட்பமாக, காசோலைகளின் தொகை, கையெழுத்து சபையின் முத்திரை போன்றவை மாற்றப்பட்டு இந்த மோசடி செய்யப்பட்டுள்ளது.

(ண—ங—120)

### ஜீ. சி. ஈ. பரீட்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடைந்து விட்டது.

இந்த இறுதித்தினம் வரை 15 பாடசாலைகளும் 1000 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமே விண்

## கடல் மற்றும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொற்றி இருப்பதாகக் கூறப்படுகிறது.

இப்பொழுது இப் பகுதிகளில் மரக்கறி வகைகளுக்கும் முட்டைக்கும் பெரும் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது.

சாதாரணமாக 2 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு முட்டை 3 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகிறது.

மரக்கறி வகைகளின் விலைகளும் இரு மடங்காக அதிகரித்து விட்டன.

இப்பகுதி மீன் வகைகளில் தொற்றி இருக்கும் நோய் குறித்து "தினபதி" அக்கரைப்பற்று நிருபர் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் திரு எஸ் செல்வராஜாவிடம் வினவினார்.

"மீன் வகைகளில் தொற்றியுள்ள நோயினை ஆராய்வதற்காக இப்பகுதி மீன் வகைகளின் "சாம்பல்" (மாதிரி) கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை முடிவு தெரியவில்லை" என திரு செல்வராஜா தெரிவிக்கிறார்.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் தமக்கு நிவாரணம் வழங்குமாறு நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு முதன்நாயக்காவை சந்தித்து கோரியிருக்கின்றனர்.

[ண—வ—035—281]



இருவருக்கு காயம் ஏற்படுத்திய

## வாகன சாரதிக்கு
### ரூ. 4 ஆயிரம் அபராதம்

கொழும்பு, மே 15

மது போதையில் வாகனத்தைச் செலுத்தி இருவருக்கு காயம் ஏற்படுத்திய வாகன சாரதி ஒருவருக்கு நீர்கொழும்பு மாஜிஸ்திரேட் திரு என் மகேந்திரராஜா 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

கட்டுநாயக்கா பொலீஸ் பிரிவைச் சேர்ந்த இருவரே காயமடைந்தவர்கள்.

இச் சம்பவம் தொடர்பாக பண்டாரகம வாசியான கிலாசிறி செய்யப்பட்டு நீர்கொழும்பு அனந்த என்பவர் கட்டுநாயக்கா பொலீஸாரினால் கைது மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

இதனையடுத்தே அவருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(ல—வ)

## புத்தளத்தில் லொறி கடத்தல்

புத்தளம், மே 14

புத்தளம் நகரில் முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான எல்ப் லொறி ஒன்று பலவந்தமாக கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

இந்த லொறியை வாடகைக்கு அமர்த்திய நான்கு இளைஞர்கள் கல்லடி என்னுமிடத்தில் வைத்து டிரைவருக்கும், கிளீனருக்கும் தேநீருடன் மயக்க மருந்தை கலந்து கொடுத்துள்ளதாக சொல்லப்படுகிறது.

அவர்கள் மயங்கிய பின்னர் இருவரையும் வெளியே இழுத்து தள்ளி விட்டு லொறியை கடத்திச் சென்றுள்ளனர்.

தற்சமயம் சாரதியும், கிளீனரும் மயக்க நிலையுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

லொறியை தேடிக் கண்டுபிடிப்பதில் புத்தளம் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

(ல—241)

### கம்பளையில் வித்தியாலய கட்டிடம் இன்று திறப்பு

கம்பளை, மே 14

கம்பளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தமிழ் மகா வித்தியாலயத்தின் புதிய இரண்டு மாடிக் கட்டிடம் இன்று திறந்து வைக்கப்படும்.

மத்திய மாகாண முதலமைச்சர் திரு டபிள்யூ பி பி திசாநாயக்க புதிய கட்டிடத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைப்பார்.

(ல—ங—087)

பாளர் திரு வீ தியாகராஜா தற்

## கதீப் தேவை

குண்டி, மீரா மக்காம் பள்ளிவாயலுக்கு மௌலவி தராதரம் பெற்ற மௌலவி தேவை- ஐந்து நேரம தொழுகை நடாத்துவும, குத்பாப் பிரசங்கம நடாத்தவும், குர்ஆன் மத்ரசா நடாத்துவும தகுதியுள்ளவராகு இருக்க வேண்டும- 25-05-90 க்கு முன்னர் நிர்வாக சபை, மீரா மக்காம் பள்ளிவாயல், குண்டி- என்ற முகவரிக்கு விண்ணப்பிக் கவும-

## மத மாற்றமும பெயர் மாற்றமும

மாத்தளை எம சி ரோட் 42 ஜே, இலக்க முகவரியைச் சேர்ந்த சுப்பையா துளசிதாசன் (தேசிய அடையாள அட்டை இலக்கம்- 49-3525041) ஆகிய நான் புனித இஸ்லாம மார்க்கத்தை 1980 ம் ஆண்டு செப்டம்பர் மாதம இருபத்தாறும திகதி தழுவி எனது பெயரை "முஹம்மட் சல்மானுல் பாரிஸ்" என்று மாற்றிக் கொண்டேன்- எனவே இனிமேல் எனது பெயரை முஹம்மட் சல்மானுல் பாரிஸ் என்றே அழைப்பேன் என வும சகல ஆவணங்களிலும அவ்வாறே கையொப்பம இடுவேன் எனவும இலங்கை ஜனநாயக அரசுக்கும, மக்களுக்கும இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்-

இங்ஙனம

முஹம்மட் சல்மானுல் பாரிஸ்

42 ஜே, எம சி ரோட்

மாத்தளை

028746


இந்த இறுதித்தினம் வரை 15 பாடசாலைகளும 1000 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமே விண்ணப்பங்களை அனுப்பி இருந்தனர் என பரீட்சை ஆணையாளர் திரு ஆதர் வெதமுல்ல தெரிவித்தார்-

இப் பரீட்சையை இரண்டு மாதங்களில் நடத்த வேண்டியிருக்கிறது- எனவே தாமதமாக விண்ணப்பங்களை அனுப்பினால் திணைக்களத்துக்கு பல சிக்கல்கள் தோன்றும்-

இதனாலேயே விண்ணப்ப முடிவுத் திகதியை மேலும் நீடிப்பதில்லை என முடிவு செய்யப்பட்டது என்று திரு வெதமுல்ல தெரிவித்தார்-

தபாலில் ஏற்படும் தாமதமன்றி வேறு வகையில் தாமதமாகக் கிடைக்கும விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்றும் அவர் சொன்னார்-

[ண—வ]



ஜப்பானில் மகாயான பௌத்த மதப் பிரிவில் தீட்சை பெற்றதையடுத்து உபாலிவம்சிக மகா நிக்காயத்தோடு இணைந்த கோட்டை மதப் பிரிவிலிருந்து நீக்கப்பட்ட சங்கைக்குரிய பெல்பொல விபஸ்ஸி தேரர் (வலது புறம நிற்பவர்) நிக்காயாக்களின் பீடாதிபதிகளுக்கு தாம ஆற்றவிருக்கும சேவைகளைப் பற்றி விளக்குவதைப் படத்தில் காண்க-

## தமிழ்-முஸ்லி...

பற்ற பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலின் கூட்டமன்றத்தில் இந்த இருதரப்பினரும நேற்று முன்தினம சந்தித்தனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில் விடுதலைப் புலிகளின் அமபாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு காஸ்ட்ரோ இராணுவப் பிரிவு பொறுப்பதிகாரி திரு ரேகன், ஜனாப் பாவா மித்திரன் ஆகியோரும,

அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல் சமமேளனத்தின் சார்பில் சமமேளனத் தலைவர் அல்ஹாஜ் மௌலவி எஸ் எல் எம ஹனீபா அக்கரைப்பற்று சமாதானக் குழுவின் தலைவர் ஜனாப் பி எஸ் மீரா, சட்டத்தரணி ஜனாப் யூ எல் எம மொஹிதீன், கொத்தணி அதிபர் ஜனாப் எம ஏ உதுமா லெவ்வை ஆகியோரும கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின் போது அமைதியை நிலைநாட்டுதல், ஆயுதங்களைக் களைதல் ஆகிய இரு முக்கிய விடயங்களும விரிவாக ஆராயப்பட்டன.

இரு தரப்பினரும திறந்த மனதுடன தமது கருத்துக்களைப பரிமாறிக் கொணடனர்.

இறுதியில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு-

* முஸ்லிம பகுதிகளில ஆயுத தேடுதல் வேட்டைகள் மேற் கொள்ளப்படும போது அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல் சமமேளனத்துக்கு அறியத் தருதல்,
* மாதம இருமுறை இரு தரப்பினரும சந்தித்து தமது பிரச்சினைகளை கலந்தாலோசித்தல்,
* முஸ்லிம மக்கள் மத்தியில்

## இந்திய தூதரக...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

என்ற பாதுகாப்பு உத்தியோகத்தரே கடந்த ஞாயிற்றுக்கிழமை தூதரகத்தின் பின்புறக் கடலில் குளித்துக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கி அகால மரணமடைந்தார்.

இவரது சடலம நேற்று பிற்பகல் விமான மூலம வட இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது-

கடலில் நீந்திக் கொண்டிருந்த இவரை அலைகள் அடித்துச் சென்ற 15 நிமிடங்களின் பின்னர் மீனவர்கள் கிருஷ்ணலாலின் சடலத்தைக் கண்டுபிடித்தனர்.

(ண-032)

ஏற்படும பிரச்சினைகள பிணக்குகளை அக்கரைப்பற்று அனைத்து பளிவாசல் சமமேளனத்தினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவே விசாரித்தல்,

(ண-வ-035)

## ஈ. பி. ஆர்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

தலைவரும நீதி அமைச்சருமான ஜனாப் ஏ சி எஸ் ஹமீத சுகவீனம் காரணமாக கலந்து கொள்ளவில்லை எனக் கூறப்பட்டது-

பேச்சுவார்த்தைகள் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் நடைபெற்றன-

வடக்கு கிழக்கு மாகாண சபையின் எதிர்காலம; வடக்கு கிழக்கு மாகாணத்தில் சட்டத்தையும ஒழுங்கையும் நிலைநாட்டல்; அப்பகுதிகளில் சமாதானத்தை ஏற்படுத்துதல்: உட்பட 19 அம்ச கோரிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டதாக ஜனாப் அபுயூசுப் தெரிவித்தார்-

பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நடைபெற்றன என்றும அவர் கூறினார்-

ஒற்றை ஆட்சி அமைப்புக்குள் சகல பிரச்சினைகளையும தீர்ப்பது சம்பந்தமாகவும் சகல சமூகங்களுக்கு இடையிலும் ஒற்றுமையை ஏற்படுத்துவது சம்பந்தமாகவும் அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்ன வலியுறுத்தியதாக திரு யோகசங்கரி தெரிவித்தார்-

"எமது தனிப்பட்ட பாதுகாப்பைப் பற்றிக் கூட நாங்கள் இச் சந்திப்பின் போது பேசவில்லை" என்றும அவர் கூறினார்-

பேச்சுவார்த்தை சுமுகமாக இடமபெற்றதாகவும அது தொடர்ந்து நடைபெறும என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ—ங—ற)

## அடகு நகை...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

என்றாலும கூட இன்னும 2 ஆயிரம அடகு நகைகள் மீட்கப்படாத நிலையில் இருக்கின்றன. இவற்றின் பெறுமதி 16 கோடி ரூபாவாகும் என்றும வங்கியின் பொது முகாமையாளர் கூறினார்.

(ண-ங-120)

புதிய கட்டடத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைப்பார்-

(ல-ங-087)

## இன்றைய திரைகளில்

5 வது வாரம

ஜெஸ்மா
[கிராண்ட்பாஸ்]
2-00, 6-00, 9-30

கொன்கோட்
தெஹிவளை
10-30, 2-00, 6-00, 9-00

வின்சர்
[யாழ்நகர்]
10-30, 2-30, 6-00

பாக்யராஜ் — ஷோபனா
சோமயாஜுலு — மனோரமா
குமரிமுத்து நடித்த

**இது நம்ம ஆளு**

[கலர்]

6 வது வாரம

சமந்தா
(கொட்டாஞ்சேனை)
10-00, 2-00, 6-00, 9-30

பிரின்ஸ்
(ஹட்டன்)

ஸ்ரீதர்
(யாழ்நகர்)
10-30 2-30, 6-30

ரஜனிகாந்த் — ராதிகா
நடித்த
சத்யா மூவிஸ்

**ஊர்க்காவலன்**

(கலர்)

# தேவிகாவின் மகள் என்னும் தைரியமே பிரபல நடிகையாக்கியது

## பேட்டியில் கனகா

"கரகாட்டக்காரன்" படம் அண்மைக் காலத்தில் வெளிவந்த படங்களில் நீண்ட நாட்கள் ஓடி - வசூலிலும் பல படங்களை பின்னால் தள்ளிய படம் என்பது படவுலகினர் பலரும் அதிசயப் பட்டுப் பேசிக் கொள்ளும் விடயம். முன்னாள் நடிகை தேவிகாவின் மகள் கனக மகாலட்சுமி என்ற கனகாவே இப்படத்தின் நாயகி.

சித்திரை திருநாள் புது வருடத்தை ஒட்டி வெளிவந்த இரண்டு படங்களில் கனகா தான் கதாநாயகி. குகநாதனின் முதலாளியம்மாவிலும் எஸ் ஏ சந்திரசேகரனின் "சீதா"விலும் கனகா நடித்து இருக்கிறார்- இரண்டிலுமே பெரிய கதாநாயகர்கள் நடிக்கவில்லை.

"முதலாளியம்மா" படத்தில் பணக்கார பெண்ணான பிரமிளாவின் கொட்டத்தை அடக்கும் படித்த பெண்ணாக கனகா நடித்து இருக்கிறார். பெண்களைக் கவரக் கூடிய வேடம் இது-

"சீதா" படத்தில் பயங்கர வில்லனாக வந்து "படம் பூராவும் கனகாவை ஆட்டி வைக்கும் சரண்ராஜை கடைசியில் கல்யாண மேடையில் கனகா பழி வாங்கி வீராவேசமாக எதிர்க்கும் காட்சிதான் படத்திலேயே உச்சக் கட்டம்.

பொதுவாக விழாக்கால வெளியீட்டுப் படங்களில் பெரிய கதாநாயகர்களின் படங்கள் தான் ஒன்றுக்கு மேல் வெளியிடப்பட்டு பரபரப்பாக பேசப் படுவது வழக்கம். இதை மாற்றி கதாநாயகி நடித்த இரு படங்கள், பண்டிகை சமயத்தில் வெளியிடப்பட்டு அவற்றைப் பற்றி பேசப்படும் படங்களாக மாற்றவும் கூடும் என்ற நம்பிக்கையைப் பெற்ற கனகாவைச் சந்தித்து வரச் சென்ற நிருபரை முதலில் தேவிகா வரவேற்றார்-

கனகாவைப் பார்க்க வந்ததை நிருபர் கூறியதும் கனகாவை இதோ அனுப்பி வைக்கிறேன் என்ற சொல்லிய தேவிகா. சொன்னபடியே கனகாவை "பின்குரல்" எதுவும் இல்லாமல் பேச அனுப்பி வைத்தார்.

"இப்போது தமிழ்ப் படவுலகில் உங்களுக்கு நிரந்தரமாக ஒரு இடம் கிடைத்து விட்டதாக நினைக்கிறீர்களா?" என்று ஆரம்பித்தார் நிருபர்.

கொஞ்சம் வெட்கத்துடன் கனகா சொன்னார்:

"எனக்கு தெரிஞ்ச வரையில் சினிமா உலகில் ஒரு கதாநாயகி அந்தஸ்தை எட்டிப் பிடிப்பதற்கே எவ்வளவோ நடிகைகள் சிரமப்படுகிறார்கள். நான் முதல் முதலாக நடிக்க...



தேவிகா — கனகா

...ச்சி ஏற்பட்டு எப்போதாவது தடங்கல் ஏற்பட்டிருக்கிறதா?" என்ற கேட்டதும் கல கலவென்ற சிரித்தார் கனகா.

கரகாட்டக்காரனுக்காக முதல் காட்சியில் நடிக்கும் போது கொஞ்சம் பயமாக இருந்தது. "சரியாக வரணுமே ஆண்டவா" என்ற மனதில் நினைத்தபடி நடித்தேன்.

அடிக்கடி டைரக்டரும், மற்றவர்களும் உங்க அம்மா பெரிய நடிகை. நீ பயப்படலாமா? என்ற ஜோக் அடித்து எனக்கு பயம் வந்தால் தெளிய வைத்து விடுவார்கள்.

பழம்பெரும் பிரபல நடிகை தேவிகாவின் மகள் என்ற எண்ணமே எனக்கு தைரியத்தை ஏற்படுத்தியது- அதுவே என்னை பிரபல நடிகையாக உயர்த்தியது-

ராமராஜனும் எனக்கு ரொம்ப தைரியமூட்டி நடிக்க வைத்தார். முதல் இரண்டு படங்களிலுமே அவர்தான் ஹீரோ என்பதால் சிரமமே தெரியவில்லை. என்றார் கனகா.

(ல-10)



தனக்கு ஜோடியாக நடிக்கசுரேஷ் பொருத்தமானவர் தானா என்ற அளந்து பார்க்கிறாரோ சித்தாரா? "
படம்- புதுவசந்தம் (ல-10)

## கே. ஆர். விஜயா நடிக்கும் சினிமாஸ்கோப் படம்

கே ஆர் விஜயா நடிக்கும் "சிலம்பு" படத்தில் முரளி, ரோகிணி ஜோடியாக நடிக்கிறார்கள். சினிமாஸ்கோப்பில் தயாராகும் இந்தப் படத்தை நேதாஜி டைரக்ட் செய்கிறார்.



அசோகா பிரதர்ஸ் நீண்ட இடைவெளிக்குப் பிறகு புதிய...

# காலி துறைமுக அபிவிருத்தி துரிதம்

## ஜப்பானிய பொறியியல் குழு அடுத்த மாதம் வருகிறது

கொழும்பு மே 15

காலி துறைமுக பாரிய அபிவிருத்தித் திட்டம் துரிதப் படுத்தப்படும்- இதற்கென ஜப்பானிய பொறியியல் நிபுணர்கள் குழு ஒன்ற ஜூன் மாத முதல் வாரத்தில் இலங்கைக்கு வரவுள்ளது-

துறைமுக கப்பல் துறை அமைச்சர் ரூபா கருணாதிலக்க இதனைத் தெரிவித்தார்-

ஜப்பானிய அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் காலி துறைமுக அபிவிருத்தி வேலைகள் 1991 ஆம ஆண்டு மார்ச் 31 ஆம திகதிக்குள் பூர்த்தியடைந்து விடுமென எதிர்பார்க்கப்படுகிறது-

இப்பாரிய திட்டத்தின் கீழ் காலி துறைமுகமும் அதனைச் சார்ந்துள்ள பிரதேசங்களும அபிவிருத்தி செய்யப்படும்-

அங்கு ஏற்றுமதி அபிவிருத்திக் கிராமங்களும், கைத்தொழிற் சாலைகளும அமைக்கப்படும்,

இதேவேளை காலிதுறைமுகப் பிரதேசத்தில் சுதந்திர வர்த்தக வலயம் ஒன்றும உருவாக்கப்படும-

இதனால் தென் பகுதியில பல லட்சம இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும என்றும அமைச்சர் சொன்னார்-

[ல—ய]

### கேகாலை;
### நடமாடும் ஜனாதிபதி சேவைக்கான ஏற்பாடுகள்

வறக்கப்பொளை மே 14

கேகாலையில் ஜூலை மாத இறுதியில் இடம்பெறவுள்ள நடமாடும் ஜனாதிபதி சேவைக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன-

இதன் பொருட்டு தற்போது மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இருந்து வரும முறைப்பாடுகளைப் பற்றிய ஆய்வுகள் கேகாலை நடமாடும ஜனாதிபதி சேவைப் பகுதியால் கவனிக்கப்பட்டு வருகின்றன-

இந்த நடமாடும சேவையின் போது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயங்களையிட்டும இங்கு அவதானம செலுத்தப்பட்டு வருகிறது-

நடமாடும ஜனாதிபதி சேவையின் போது சமர்ப்பிக்கப்படும் பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன-

காணி, போக்குவரத்து தபால் ஆகிய அமைச்சுக்களுக்கான நடமாடும சேவைகளும கடந்த ஏப்ரல் மாதத்திலும் மே முதல் வாரத்திலும் நடைபெற்றன-

[ல—333]

### சேவா வனிதா அன்பளிப்பு

கொழும்பு மே 15

எகிப்துக்கான இலங்கைத் தூதரகத்தின் சேவா வனிதா மகளிர் பிரிவு ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 800 ரூபாவை வெளிவிவகார அமைச்சின் சேவா வனிதா பிரிவுக்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்துள்ளது -

சமூக சேவை நடவடிக்கைகளின் பொருட்டு செலவிடும வகையிலேயே கெய்ரோ தூதரக சேவா வனிதா உறுப்பினர்கள் நிதி திரட்டி அனுப்பி வைத்துள்ளனர்-

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம முதல் கடந்த பெப்ரவரி வரையிலான காலப்பகுதியில் நடத்தப்பட்ட ஒன்பது கண்காட்சிகள் மூலம இந் நிதி திரட்டப்பட்டது- [ல—032]

அளவற்ற கருணையுள்ளோனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் திருநாமத்தால்
ஈரானிய தூதரகம் கொழும்பு

எனக்கு தெரிந்த வரையில் சினிமா உலகில் ஒரு கதாநாயகி அந்தஸ்தை எட்டிப் பிடிப்பதற்கே எவ்வளவோ நடிகைகள் சிரமப்படுகிறார்கள். நான் முதல் முதலாக நடித்த கரகாட்டக் காரனும சரி, அப்புறம சமீபத்தில் வந்து 100 நாட்களை தாண்டி ஓடிய தங்கமான ராசாவும சரி என்னை இந்தப் படவுலகத்தில் ஹீரோயின் வரிசையில் சேர்த்து விட்டன. இப்போது பல கதாநாயகர்களுடன் நடிக்கும நான் ரஜனிகாந்துடனும ஒரு படத்தில் நாயகியாக நடிக்கிறேன்! இதை எல்லாம வைத்துப் பார்க்கும போது நீங்களே தெரிந்த கொள்ளுங்களேன்" என்றார் கனகா.

"நடிக்கும போது பய உணர்

நேதாஜி டைரக்ட் செய்கிறார்.

அசோகா பிரதர்ஸ் நீண்ட இடைவெளிக்குப் பிறகு புதிய படம ஒன்றை தயாரிக்கிறார்கள்.

ஏற்கனவே "நான் வாழ வைப்பேன்" "நான் ஏன் பிறந்தேன்" "தீர்க்க சுமங்கலி" "நம வீட்டு தெய்வம" "சபதம" போன்ற பல வெற்றிப் படங்களைத் தயாரித்த இந்த நிறுவனம. இப்போத சினிமாஸ்கோப்பில் தயாரிக்கும படத்துக்கு "சிலமபு" என்று பெயரிடப்பட்டு உள்ளது.

பல வெற்றிப் படங்களை இயக்கிய நேதாஜி இந்தப் படத்தின் கதை, திரைகதை, வசனம



கே ஆர் விஜயா

டைரக்ஷன் ஆகிய பொறுப்புகளை ஏற்றுள்ளார்.

எம எஸ் விஸ்வநாதன் இசை அமைக்க பி என் சுந்தரம ஒளிப்பதிவு செய்கிறார்.

கே ஆர் விஜயா, முரளி, ரோகிணி, சந்திரசேகர் கோகிலா வி கே ராமசாமி, மனோரமா, ராதாரவி, விஜயகுமார், செந்தில் உட்பட பலர் நடிக்கிறார்கள்.

காதல் பக்தி பாசம போன்றவைகளை மையமாகக் கொண்டு இந்தப் படம பிரமாண்டமான முறையில் தயாரிக்கப்படுகிறது.

(ல-10)

# நிஷாந்திக்கு நாயகனாக ராம்கி

சிவகாமசுந்தரி பிலிமஸ் தயாரிக்கும படத்துக்கு "யார் போட்ட முடிச்சு" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ராமகி கதாநாயகனாக நடிக்க கதாநாயகியாக நடிக்கிறார் நிஷாந்தி. ஜனகராஜ், நிழல்கள் ரவி, ராதாரவி, செந்தாமரை, மூர்த்தி, குமரிமுத்து, ராஜப்பா, சாமிநாதன், தாடி ராஜன், சுபா, மனோரமா, ரேணுகா நடிக்கிறார்கள்.

எஸ் ஏ ராஜகுமார் பாடல்கள் எழுதி இசை அமைக்க, திரைக்கதை அமைத்த எம ஜெய்குமார் டைரக்ட் செய்கிறார்.

"பாடும பறவைகள்" என்ற வெற்றிப் படத்தை டைரக்ட் செய்தவர் இவர். பேராசிரியர் நாராண்டுரங்கன் கதை வசனம எழுத, ராமச்சந்திர பாபு ஒளிப்பதிவை கவனிக்க, சி நடராஜன் தயாரிப்பு நிர்வாகத்தில் பி ராதா கிருஷ்ணன் மிகுந்த பொருட் செலவில் வளர்ந்து வரும படம "யார் போட்ட முடிச்சு" (ல-10)

## அல்லிப் பூ உறங்க ஆரிரரோ பாடவா

பிரின்சி பிலிம் புரொடக்சன்ஸ் தயாரிக்கும பூ உறங்கும நேரம படத்திற்கு எஸ் ஏ தாஸ் இசையில் 3 பாடல்கள் ஒலிப்பதிவாகின. அந்தப் பாடல்கள் வருமாறு—

"அல்லிப்பூ நீ உறங்க ஆரிரரோ பாடவா"

"வண்டி மாடு கட்டி வாரச் சந்தை போறாங்க"

"இவைகள் திறந்த இதயம நுழைந்த கவிதை பிறந்தது"

புது இயக்குனர் மகேந்திரா இதன் மூலம் அறிமுகம் ஆகிறார். கதை வசனமும் அவருடையதே.

[இ—10]

தினபதி சினிமா

# கட்டுரைப் போட்டி

ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஸ்தாபகரும இஸ்லாமிய புரட்சித் தலைவருமான இமாம கொமெய்னி மறைந்த ஓராண்டு பூர்த்தியை நினைவு கூரும முகமாக ஈரான் இஸ்லாமியக் குடியரசின் இலங்கைத் தூதரகம கட்டுரைப் போட்டியொன்றை ஒழுங்கு செய்துள்ளது. இப் போட்டிக்கான கட்டுரைகள் 1990 ஆம ஆண்டு ஜூன் மாதம மூன்றாம திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும.

இக்கட்டுரைப் போட்டியில் சகல இலங்கைப் பிரஜைகளும கலந்து கொள்ளலாம. கட்டுரைகள் கீழே தரப்பட்டுள்ள பொருள்களில் ஒன்றைக் கருவாகக் கொண்டதாக இருக்க வேண்டும. மேலும ஒரு கட்டுரை குறைந்த பட்சம 1500 வார்த்தைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும. தமிழ், ஆங்கிலம மற்றும சிங்கள மொழிகளில் எதிலேனும ஒரு மொழியில் கட்டுரைகள் எழுதலாம.

இக்கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கீழ்க்கண்ட பரிசுகள் வழங்கப்படும.

முதல் பரிசு ஈரான் இஸ்லாமிய குடியரசுக்கு சென்று வர விமான டிக்கெட் (தங்குமிட வசதி மற்றும இதனுடன் தொடர்பு கொண்ட ஏனைய செலவினங்கள் அதிகாரிகளினால் பொறுப்பேற்கப்படும)

மூன்று மொழிகளிலும தலா ஒரு கட்டுரை வீதம மூன்று கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும. மேலும 7 ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும.

கட்டுரைகளுக்கான கருப்பொருள்கள்—

(1) இமாம கொமெய்னி— ஈரான் இஸ்லாமிய புரட்சியின் வெற்றிக்கான சிற்பி

(2) ஈரான் இஸ்லாமிய புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து இஸ்லாமிய உலகில் ஏற்பட்ட கலாசார, மற்றும சமய ரீதியான மறுமலர்ச்சி—

(3) உலக அரசியல் அரங்கில் இமாம கொமெய்னியின் கொள்கைகள் ஏற்படுத்திய தாக்கம—

(4) இமாம கொமெய்னி— உலகின் ஒடுக்கப்பட்ட மக்களின் வெற்றியாளன்—

போட்டிக்கான கட்டுரைகள் அனைத்தும எதிர்வரும ஜூன் மாதம மூன்றாம திகதிக்கு முன்னதாக, செயலாளர், ஈரான் இஸ்லாமிய குடியரசின் தூதரகம, 226, பௌத்தாலோக மாவத்தை, கொழுமபு—7 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும—

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல- 1613

— 1990 மே 16 —
சுடர் 18 கதிர் 4484

# உர விலையேற்றத்தை சமாளிக்க கடன் வசதி

## விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை

உர வகைகளின் விலையேற்றத்தினால் விவசாயிகள் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்காக கடன் திட்டமொன்று செயற்படுத்தப்படுகிறது.

இந்தக் கடனுதவியை துரிதகதியில் பெற்றுக் கொடுப்பதற்காக தற்சமயம் திறைசேரியுடனும் வங்கிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது.

பயிர் செய்யும் ஏக்கரின் அளவைக் கொண்டே கடனுதவி பற்றித் தீர்மானிக்கப்படும்.

உரவகைகளுக்காக விவசாயிகள் பெறும் இந்தக் கடனுதவியை அவர்கள் விளைச்சலின் பின்னர் மீளச் செலுத்தக் கூடிய விதத்திலேயே இத்திட்டம் தயாரிக்கப்படும்.

இதேவேளை ரசாயன உர வகைகளுக்குப் பதிலாக இயற்கை உரப்பாவனையை ஊக்குவிக்கும் திட்டமொன்றும் செயற்படுத்தப்படும். இதனால் விவசாயிகள் பெரிதும் நன்மையடைவார்கள்.

இதேவேளையில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கென மலர்களை உற்பத்தி செய்வோருக்கு மக்கள் வங்கி கடனுதவிகளை வழங்க முன் வந்திருக்கிறது.

இலங்கையில் உற்பத்தியாகும் மலர்களுக்கு ஐரோப்பிய நாடுகளிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும் நல்ல கிராக்கி நிலவுகிறது.

இதனால் இங்கு உற்பத்தியாகும் மலர்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் பெருமளவு அந்நிய செலாவணியைப் பெறமுடியும் என்று மக்கள் வங்கி நம்பிக்கை தெரிவித்திருக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் மலர்ச் செய்கையில் ஈடுபட முன்வருவோருக்குக் கடனுதவிகளை வழங்க மக்கள் வங்கி தயாராக இருக்கிறது.

இதன்படி புத்தளம், குருநாகல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மலர் உற்பத்தியாளர்களுக்கு மக்கள் வங்கிக் கிளைகள் மூலம் இதுவரை பத்து லட்சம் ரூபா கடனாக வழங்கப்பட்டிருக்கிறது.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் மலர்களை உற்பத்தி செய்வதற்கான இரு நாற்று மேடைகள் மாதமபையில் அமைக்கப்பட்டுள்ளன.

இங்கு உற்பத்தியாகும் மலர்க் கன்றுகள் மலர் உற்பத்தியாளர்களிடையே விநியோகிக்கப்படும். மக்கள் வங்கி இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. (ம)

## யாழ்ப்பாணத்து தொலைபேசிகள்

யாழ்ப்பாணத்தில் இப்போது தொலைபேசிகள் அடிக்கடி செயலிழந்து வருகின்றன.

மற்ற இடங்களோடு ஒப்பிடும் போது யாழ் தொலைபேசிச் சேவை மிகவும் மோசமடைந்து வருகிறது. இது கவலை தருவதாக உள்ளது.

1983க்குப் பிறகு வடக்கு நீண்ட காலம் யுத்த களமாக இருந்தது. அதனால் அங்கு தொலை தொடர்பு சேவைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

தொலை தொடர்பு சேவைகள் மட்டுமன்றி ரயில், பஸ் சேவைகள் கூட இல்லாமல் வடக்கு மற்ற இடங்களிலிருந்து அவ்வப்போது முற்றாகத் துண்டிக்கப்பட்டுமிருந்தது.

கடந்த மார்ச் 24 இல் இந்திய படை வெளியேறிய பின்னர்தான் நிலைமை மாறியது.

இரவு ரயில் சேவையும் ஆரம்பிக்கப்பட்டதோடு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது.

யாழ்ப்பாணத் தொலைபேசிகள் முழுவதும் செயற்படா விட்டாலும் பெருந்தொகையான தொலைபேசிகள் செயற்படத் தொடங்கின.

யாழ் தொலை தொடர்பு பகுதியினர் மேற்கொண்ட பெரு முயற்சியின் பயன் இது. அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

ஆரம்பத்தில் எல்லாம் நன்றாகவே இருந்தன. ஆனால் இப்போது யாழ் தொலைபேசிகள் அடிக்கடி செயலிழந்து வருகின்றன.

காரணம் என்ன?

கல்முனை

## ஸாஹிறாவின் 40 ஆவது ஆண்டு நிறைவு

கல்முனை மே 14

கல்முனை ஸாஹிறாக் கல்லூரியின் 40 ஆவது ஆண்டு நிறைவை வெகு விமரிசையாகக் கொண்டாடுவதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வரும் இவ்விழா தொடர்ந்து நான்கு நாட்களுக்கு நடத்தப்படும்.

பொருட்காட்சி பழைய மாணவர் தினம் பெற்றார் தினம் மலர் வெளியீடு பரிசளிப்பு ஆகியன ஒவ்வொரு தினங்களிலும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படும். [இ—281]



## பதுளையில் சிரமதானம்

அண்மையில் பதுளையில் மாபெரும் சிரமதானம் ஒன்று இடம் பெற்றது.

பதுளை சரித்திரத்தில் முதல் முறையாக இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஆண், பெண் பாடசாலை மாணவ மாணவிகள் இச்சிரமதானப் பணியில் கலந்து கொண்டனர்.

பதுளை ஆளுநர் திரு திலக் ரட்னாயக மேற்கொண்ட இச்சிரமதானத்தின் மூலம் பதுளை நகரம் முழுமையாக சுத்தம் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அரசாங்க ஊழியர்கள், வங்கி ஊழியர்கள், மற்றும் தனியார் துறை ஊழியர்களும், பாடசாலை மாணவ மாணவிகளும் இச் சிரமதானத்தில் கலந்து கொண்டனர். (இ-037)

மாத்தறை மாவட்ட தமிழ்

## பாடசாலைகளில் இந்து சமயம் போதிக்க ஆசிரியர்கள் இல்லை

### பெற்றோர்கள் புகார்

மாத்தறை, மே 14

மாத்தறை மாவட்டத்திலுள்ள தமிழ் பாடசாலைகளில் இந்து சமயம் போதிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாமையினால் சமயக் கல்வியைப் பெற முடியாத மாணவர்கள் திண்டாடுவதாக தமிழ் பெற்றோர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

ஹுளந்தாவ தோட்டத் தமிழ் வித்தியாலயத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கிறார்கள்.

முழுவதும் தமிழ் மாணவர்களைக் கொண்ட இந்த வித்தியாலயத்தில் கடமை புரியும் அத்தனை ஆசிரியர்களும் முஸ்லிம் ஆசிரியர்களாவர்.

இதனால் இங்கு சமய பாடம் போதிக்க முடியாமல் இருக்கிறது.

இருநூறுக்கும் மேற்பட்ட பெவர்லி தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் மூன்று ஆசிரியர்களும் முஸ்லிம்களேயாவர். இந்த வித்தியாலயத்திலும் இதே நிலைமை ஏற்பட்டுள்ளது.

என்சல்வத்த தமிழ் வித்தியாலயம், அனிங்கந்த தமிழ் வித்தியாலயம், சென் மெதிவ் வித்தியாலயம், ஹென்ட்போட் தமிழ் வித்தியாலயம் என்பவற்றிலும் இதே நிலையே ஏற்பட்டுள்ளது.

கொடப்பிட்டிய ஸாதாத் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களுக்கும் இந்து சமய பாடம் போதிப்பதற்கு ஆசிரியர் இல்லையென்று அதிபர் தெரிவித்தார். (இ—430)

## இலங்கை ஹாஜிகளுக்கு சவூதியில் தொழில் புரியும்

## நாச்சிக்குடாவில்

## தையற் பயிற்சி வகுப்பு மீண்டும் ஆரம்பம்

## செய்தித் திரட்டு

### பயிலுநர் ஆசிரியர் கவலை

கிண்ணியா, மே 14

திருகோணமலை மாவட்டத்தில் மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற பயிலுநர் ஆசிரியர்கள் கடந்த 7-3-1990 அன்று கடமையேற்றனர்.

ஆனால் கடந்த 2 மாதகாலமாக இது வரையும் சம்பளமாக எந்தக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை.

இவை குறித்து பயிலுநர் ஆசிரியர்களின் மனதில் பெருங் கவலை சூழ்ந்துள்ளது. (இ-151)

### வெங்காயம் தட்டுப்பாடு

வெலிகாமம் மே 14

வெலிகாமம் நகரில் சின்ன வெங்காயத்துக்கும், பம்பாய் வெங்காயத்துக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனைத் தொடர்ந்து ஒரு கிலோ சின்ன வெங்காயம் 40 ரூபாவாக விற்கப்படுகிறது.

இதனால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர். (இ-331)

### கதிரை மேசை திருத்தியமைப்பு

கல்முனை மே 14

கல்முனை ஸாஹிறாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் இக்கல்லூரியில் பாவனைக்குதவாத சுமார் 200 கதிரைகள், மேசைகள் என்பன மீண்டும் திருத்தி எடுக்கப்பட்டன.

இதற்கென பிரஸ்தாப மாணவர் சங்கம் சுமார் 5 ஆயிரம் ரூபாவை செலவு செய்து உதவியது.

பிரஸ்தாப தகவலை பழைய மாணவர் சங்கத்தின் தலைவரும், கல்லூரி அதிபருமான ஜனாப் ஏ எம் ஹுஸைன் தினபதிக்குத் தெரிவித்தார். (இ-281)

### இரு நேர

இப்போது யாழ் தொலை பேசிகள் அடிக்கடி செயலி ழந்து வருகின்றன.

காரணம் என்ன?

தொலைபேசிக் கம்பிகள் வெட்டப்படுகின்றன.

தொலைபேசிச் சேவையைச் சீர்குலைக்கும் நோக்குடன் நாசகார சக்திகள் மேற்கொள்ளும் நாச வேலையல்ல இது.

தங்கத்தின் விலை உயர உயர தொலைபேசி இணைப்புக்குப் பயன்படுத்தப்படும் செப்புக் கம்பிக்குக் கிராக்கி அதிகரித்து வருகிறது.

திருடர்கள் பணம் சம்பாதிப்பதற்காகத் தமது கைவரிசையைக் காட்டி வருகிறார்கள்.

யாழ்ப்பாண நகரத்தினுள்ளே கூட செப்புக் கம்பிகள் வெட்டப்பட்ட சம்பவங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

யாழ் குடா நாட்டில் இப்போது கொலை கொள்ளைச் சம்பவங்கள் இல்லை என்று பலரும் பெருமைப்படும் வேளையில் தொலைபேசிச் செப்பு கம்பிகள் திருட்டுப் போவது பலருக்கும் வியப்பாகவே இருக்கிறது.

இந்தத் திருட்டை நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொலைபேசிகள் செயலிழப்பதால் பாவனையாளர்களுக்கு மட்டுமன்றி அவர்கள் வாழும் பகுதிக்கும் பெரும் நஷ்டம் ஏற்படுகிறது.

விஞ்ஞான தொழில் நுட்பத் துறைகள் வெகுவாக வளர்ந்துள்ள இந்நாட்களில் தொலைபேசிச் சேவையை நடத்த தொடர்ந்து செப்புக் கம்பி இணைப்பை நம்பியிருப்பதா? அதிகாரிகள் இதில் கவனம் செலுத்த வேண்டும்.

---

## வகுப்பு மீண்டும் ஆரம்பம்

கிண்ணியா மே 14

படித்த இளம் யுவதிகளின் நலன் கருதி தொழில் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் தையல் பயிற்சி வகுப்பு மீண்டும் கிண்ணியாவில் புதிய மாணவிகளுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் படித்த வசதியற்ற 25 இளம் யுவதிகள் நாளொன்றுக்கு 15 ரூபா கொடுப்பனவுகளுடன் இப்பயிற்சியில் கலந்து கொள்கின்றனர்.

இப்பயிற்சி வகுப்பினை திருகோணமலை மாவட்டத் தொழில் திணைக்கள உதவித் தொழில் ஆணையாளர் திரு வீ நடராஜா கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

[ஐ—151]

---

## புத்தாண்டு பண்டிகை

கொழும்பு மே 15

கனடாவின் பல நகரங்களில் இவ்வாண்டு புத்தாண்டுப் பண்டிகை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

ஒட்டாவா, மான்ட்றியல், வான் கூவர், கல்காரி எட்மண்டன் ஆகிய நகரங்களில் கொண்டாடப்பட்ட புத்தாண்டு வைபவங்களில் கனடாவுக்கான இலங்கைத் தூதவர் வால்டர் ரூபசிங்க அவரது பாரியார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைதி மற்றும் சமாதானம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட இக்கொண்டாட்டங்களை இலங்கை கனேடிய நட்புறவுச் சங்கம் ஒழுங்கு செய்திருந்தது. (ஐ-032)

---

# நாச்சிக்குடாவில் ஆரம்பப் பாடசாலை

## ராஜாங்க அமைச்சர் உறுதி

சினக்குடா, மே 14

சினக்குடா பகுதிகளிலுள்ள நாச்சிக்குடா கிராமத்தில் ஆரம்பப் பாடசாலை ஒன்று நிறுவப்படும்.

இது தொடர்பாக கப்பல், துறைமுகங்கள் ராஜாங்க அமைச்சரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாப் எம். ஈ எச் மஹ்ரூப் தம்மைச் சந்தித்த தூதுக் குழுவினரிடம் உறுதியளித்தார்.

சினக்குடா மக்கள் நற்காரியாலயத்தில் அமைச்சரைச் சந்தித்த குழுவினர் நாச்சிக்குடா கிராமத்தில் வசிக்கும் சிறார்கள் கல்வி பெறுவதற்காக சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டி இருக்கிறது என்றும்,

இதனால் சிறார்கள் பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதுடன் சில பிரதான வீதிகளைக் கடந்து போக வேண்டி இருக்கிறது என்றும் —

ஆகவே நாச்சிக்குடாவில் ஆரம்பப் பாடசாலை ஒன்று நிறுவப்படுவது மிகவும் அவசியமெனவும் எடுத்துக் கூறினார்.

இதனை ஏற்றுக் கொண்ட ராஜாங்க அமைச்சர் இந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் நாச்சிக்குடாவில் பாடசாலைக் கட்டிடம் நிறுவப்படும் என உறுதி அளித்தார்.

அமைச்சரைச் சந்தித்த குழுவில் நாச்சிக்குடா கோல்டன் ஸ்டார் விளையாட்டுக் கழகத் தலைவர் ஜனாப் ஏ எம மௌஜூத், நாச்சிக்குடா கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஜனாப் எம ஐ அப்துல் காதர் நாச்சிக்குடா மீனவர் சங்கச் செயலாளர் ஜனாப் ஐ. அப்துல் சலாம (சக்கரியா) ஆகியோருடன் மற்றும் சிலரும் இடம் பெற்றிருந்தனர்.

(ல-054)

---

## சவூதியில் தொழில் புரியும் இலங்கையர்கள் உதவுவர்

கொழும்பு, மே 15

இம்முறை ஹஜ் யாத்திரை மேற்கொள்ளும் இலங்கை முஸ்லிம்களுக்கு ஹஜ் காலத்தில் உதவி அளிப்பதற்கு சவூதி அரேபியாவில் தொழில் புரியும் பல இலங்கையர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

தொண்டர் அடிப்படையில் இவர்கள் ஹாஜிகளுக்கு உதவி ஒத்தாசை புரிவர்.

சவூதியில் வசிக்கும் பல இலங்கையர்கள் கடந்த தசாப்தத்தில் வருடந்தோறும் ஹஜ் ஹாஜிகளுக்கு ஹஜ் காலத்தில் உதவி ஒத்தாசை புரிந்து வருகின்றனர்.

இவ்வருடமும் அந்தத் தொண்டர் சேவை வழங்கப்படுமென்று முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம் அஸ்வர் கூறியுள்ளார்.

இலங்கையிலிருந்து இம்முறை மூவாயிரத்திற்கும் அதிகமானோர் ஹஜ் யாத்திரை மேற்கொள்ள இருக்கின்றனர்.

ஹாஜிகளின் மருத்துவ வசதிகளைக் கவனிக்க டாக்டர்கள் குழுவொன்று மக்காவுக்குச் செல்லுமென்றும் அமைச்சர் மேலும் கூறினார். [ல—007]

---

# இரவுபஸ்சேவையை மீண்டும் ஆரம்பிக்க கோரிக்கை

மட்டுநகர் காலை ரயில் தற்போது காலையில் ஆறு இருபது (6.20) மணிக்கு மட்டு நகரிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டுச் செல்கிறது.

இந்த காலை நேர ரயில் காலை ஆறரை மணிக்குள் கொழும்புக்குப் புறப்பட்டுச் செல்லும் இதனால் இந்தப் பகுதியில் திருக்கோயில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பாலமுனை, ஒலுவில், நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது கல்முனை, அம்பாறை, சம்மாந்துறை, மல்வத்தை மருதமுனை கல்லாறு, களுவாஞ்சிக்குடிவரை வாழும் மக்களுக்கு கொழும்பு செல்லும் இந்த புகையிரதத்தில் பிரயாணம் செய்ய முடிவதுமில்லை. அதற்கான வாய்ப்புகளும் இவர்களுக்கில்லை.

இப்பகுதி மக்கள் இக்காலை ரயிலில் கொழும்புப் பயணத்தை மேற்கொள்ள வேண்டுமாயின் இரவு இரண்டு மணிக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் தினசரி பஸ் சேவைகள் நடை பெறுவது மிகவும் அவசியமாகும். (சில வருடங்களுக்கு முன்பிருந்த இச் சேவை தற்போதில்லை.)

எனவே, இவ் இரவு பஸ் சேவை உடன் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இல்லையேல் காலையில் கொழும்பு செல்லும் மட்டு நகர் ரயில் காலை எட்டு மணிக்கோ அல்லது ஏழரை மணிக்கோ புறப்பட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

## ஆசிரியருக்கு கடிதம்

இதனை இப்பகுதி வாழ் அனைத்து மக்கள் சார்பாகவும். உரியவர்களை "தினபதி ஆசிரியருக்குக் கடிதம்" வாயிலாக பணிக்கிறேன்.

— ஏம ஐ உஸனார்ஸலீம

---

(ஐ-281)

## இரு நேர வகுப்புகள்

கிண்ணியா மே 14

கிண்ணியாப் பிரதேசத்தில் முதலாந்தர பாடசாலைகள் அனைத்திலும் கடந்த 2-5-90 முதல் இரு நேரப் பாட வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

காலை 8-30 மணிக்கு பாடசாலை ஆரம்பமாகி மாலை 3.30 மணிக்கு விடப்படுகின்றது. இதற்குள் 1-00 மணித்தியாலம் ஓய்வு வழங்கப்படுகிறது.

இவ்விரு நேரங்கள் பாடசாலை நடத்துவதைப் பற்றிய அபிப்பிராயங்களைக் கோரி சுற்று நிருபங்களையும், மாவட்ட கல்வித் திணைக்களம் அதிபர்களுக்கு அனுப்பி உள்ளது. (ஐ-151)

## அரபு மத்ரசா

தெல்தெனிய மே 14

தெல்தெனிய தொகுதியைச் சேர்ந்த அம்பகஹலந்த எனும் இடத்தில் உள்ள மஸ்ஜிதுல் மின்ஹாஜ் தைக்காவில் அரபு மத்ரசாவொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ-289)

## கண்டியில் கடும் மழை

தெல்தெனிய மே 14

கண்டி மாவட்டத்தில் பயங்கர இடி முழக்கத்துடனும் காற்றுடனும் கடும்மழை பெய்யத் தொடங்கியுள்ளது.

இதனால் வாய்க்கால்கள் நிரம்பி வழிந்தோடுகின்றன. மேலும் மலைநாட்டுப் பகுதிகளைச் சேர்ந்த பல இடங்களில் மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

[—227]

# மடகாஸ்கர் சதி புரட்சி:
# 13 கிளர்ச்சியாளர் கைது

## வானொலி நிலையம் மீட்பு

அன்டனாரிவோ, மே 15

இந்து சமுத்திரத் தீவான மடகாஸ்கர் சதிப்புரட்சியின் பின் 13 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். கடந்த ஆண்டு சதிப்புரட்சியில் சம்பந்தப்பட்ட இருவரும் கைதாகி இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

மடகாஸ்கரில் கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் இதே போன்று வானொலி நிலையத்தைக் கைப்பற்றி சதிப் புரட்சி நடத்தப்பட்டது.

இந்தப் புரட்சியில் சம்பந்தப் பட்டிருந்த கன்சர் வேட்டில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருவர் இப்போதைய சதிப் புரட்சியி லும் பங்கு வகித்துள்ளனர்.

இந்தத் தகவல் நேற்று 13 பேர் கைதானதை அடுத்தே வெளியாகியது.

வானொலி நிலையத்தை குண்டுகளால் எறிந்து தாக்கிய கிளர்ச்சியாளர்களின் ஆதரவாளர்களில் இந்த இருவரும் அடங்கியுள்ளனர்.

மலகாஸி தேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரும் கைதாகியிருக்கிறார்.

ஏனையோர் மாணவர்கள், தொழிலாளர்கள் ஆவர்.

ஞாயிற்றுக்கிழமை மடகாஸ்கரில் நடந்த சதிப்புரட்சி ஜனாதிபதி டிடியர் ரட்சிராக்காவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான துருப்புகளால் முறியடிக்கப்பட்டது.

இனம் தெரியாத கிளர்ச்சிக் குழுவொன்று வானொலி நிலையத்தைக் கைப்பற்றி மடகாஸ்கரில் புதிய குடியரசு ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாக அறிவித்தது. ஆனால் மூன்று மணி நேரத்துக்குப் பின் ஜனாதிபதி ரட்சிராக்காவின் முழுக் கட்டுப்பாட்டில் அரசாங்கம் இருப்பதாக வானொலி அறிவித்தது.

இப்போது மடகாஸ்கரில் நிலமைகள் சீரடைந்துள்ளன. (எ)

## பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டுள்ள
## அங்கோலாவுக்கு
### அவசர உணவு உதவி

ஐக்கிய நாடுகள் மே 15

அங்கோலாவில் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அங்கு 8 லட்சம் பேர் உணவின்றி தவிக்கின்றனர். அங்கு அவசரமாக உணவுப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

ஐ நா செயலாளர் நாயகம் பெரஸ் டி குவிலர் இவ்வாறு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐ நா நிவாரண ஏஜென்ஸியின் அறிக்கைப்படி அங்கோலாவின் மத்திய மற்றும் தென் மாகாணங்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. பசியினால் பெருமளவு மரணங்கள் சம்பவிக்கின்றன. இவர்களில் பெரும்பாலோர் குழந்தைகளாவர்.

பஞ்சம் மற்றும் உள்நாட்டு யுத்தம் காரணமாக கடந்த சில மாதங்களாக எதியோப்பியா, சூடான், மொசம்பிக் ஆகிய நாடுகளும் நிவாரண உதவி கோரி வேண்டுகோள் விடுத்து வருகின்றன.

அங்கோலாவின் உடனடி உணவுத் தேவையை பூர்த்தி செய்ய 45,000 தொன் உணவுப் பொருட்கள் தேவைப்படுகின்றன.

## 12 ஆண்டுகளின் பின் ஆப்கானிஸ்தானில் அழகுராணிப் போட்டி

காபூல் மே 15

ஆப்கானிஸ்தானில் 12 ஆண்டுகளுக்குப் பின் அழகு ராணிப் போட்டி நடத்தப்பட்டது.

காபூலில் நடந்த போட்டியில் விமானப் பணிப் பெண்ணாகப் பணி புரியும் 20 வயது குட்சியா அப்தல் குதஸ் அழகு ராணியாகத் தெரிவானார்.

ஆப்கன் ஜனாதிபதி நஜிபுல்லாவின் கட்சியான ஆளும் மக்கள் ஜனநாயகக் கட்சியின் இளைஞர் வட்டம் இந்தப் போட்டியை ஏற்பாடு செய்திருந்தது.

1978 ஆம் ஆண்டில் ஆப்கனில் மார்க்ஸிய புரட்சி இடம்பெற்றது.

இப்புரட்சியின் பின்னர் அங்கு அழகு ராணிப் போட்டிகள் நடத்தப்படவில்லை. (எ)

## அகதிகள் தாயகம் திரும்ப நிதி உதவி வழங்கும் படி
### கௌதமாலா அரசு கோரிக்கை

கௌதமாலா மே 15

